தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

மலர் : 6 திருவள்ளுவர் ஆண்டு 2019 - மாசி 2 - 14-2-'88 இதழ் : 11

துணைவேந்தர் ஆஸ்திரேலியப் பயணம்

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் காமன் வெல்த் பல்கலைக் கழகச் சங்க 14-ஆவது மாநாடு 4-2-'88 முதல் 12-2-'88 வரை ஆஸ்திரேலியாவில் உள்ள பெர்த் என்னுமிடத்தில் நடைபெறுகிறது.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 3-2-'88-இல் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

குடியரசுநாள் விழா

இந்தியத் திருநாட்டின் 39-ஆவது குடியரசு நாள் கொடியேற்றுவிழா தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சார்பில் அரண்மனை வளாகத்தில் 26-1-'88 காலை 8 மணியில் நிகழ்ந்தது.

துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் தேசியக் கொடியை ஏற்றிவைத்துக் குடியரசுநாள் உரையாற்றினார்.

"இந்தியா வலிமைபெற்று உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்பதற்கு நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதும் பேணி வளர்ப்பதும் அவசியமாகும்"

- என்று தமது உரையில் குறிப்பிட்டார்.

பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், பணியாளர்கள் விழாவில் கலந்துகொண்டு கொடி வணக்கம் செலுத்தினர்.

பொங்கல் விழா

ஆண்டுதோறும் பொங்கல் விழாவையொட்டித் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்பெறும் நாட்டுப்புறக் கலைவிழா இவ்வாண்டு 15-1-'88 வெள்ளிக் கிழமை மாலை 4 மணியிலிருந்து இரவு 9 மணிவரை சிறப்பாக நடத்தப்பட்டது.



நையாண்டி மேள இசையுடன் தொடங்கப் பெற்ற இவ்விழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளர் முனைவர் பெ.சின்னையன் தலைமை தாங்கினார். நாடகத் துறைப் பேராசிரியர் சே. இராமானுசம் விழாவைத் தொடங்கிவைத்தார்.

விழாவில் நாட்டுப்புறக் கலை வடிவங்களான கும்மி, கோலாட்டம், கிராமப்புறப் பெண்களின் ஆடல்களும், சிலம்பம், மடு சுற்றுதல், தீப்பந்தம், புலி ஆட்டம், குத்து வரிசை முதலிய விளையாட்டுகளும் சிறப்பாக நிகழ்ந்தன. இவற்றைத் தொடர்ந்து மெலட்டூர் கிராமக் கலைஞர்கள் பங்கேற்ற 'அரவான் களப்பலி' எனும் தெருக்கூத்து நடைபெற்றது.

நாடகத்துறை விரிவுரையாளர் முனைவர் கு.முருகேசன் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுற்றது.

- கு. முருகேசன்,
நாடகத்துறை.

இலக்கியத்துறைக் கருத்தரங்குகள்

சங்க இலக்கியம் பற்றிய சிறப்புக் கருத்தரங்கு இலக்கியத்துறையின் சார்பில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அரண்மனைவளாகக் கருத்தரங்குஅறையில் 20,21-2-'88 ஆகிய இரு நாள்களில் நடைபெறும்.

கருத்தரங்கு 20-2-'88 காலை 10 மணியில் தொடங்கும். துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் தலைமை தாங்கித் தொடக்கவுரை நிகழ்த்துவார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் மையக் கருத்துரை வழங்குவார்.

நான்கு அமர்வுகளாக நடைபெறும் இருநாள் கருத்தரங்கில் ஒன்பதின்மர் பல்வேறு பொருள்களில் ஆய்வுரைகள் நிகழ்த்துவர்.

இலக்கியத் துறையின் 'தமிழ் நாவல்களில் உளவியல் சித்திரிப்பு' பற்றிய கருத்தரங்கு தமிழ்ப் பல்கலைக்கழக அரண்மனை வளாகக் கருத்தரங்க அறையில் 27, 28-2-'88 ஆகிய நாள்களில் நடைபெறும்.

27-2-'88 காலை 10 மணியில் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் தலைமையில் கருத்தரங்கு நடைபெறும். சென்னை அனைத்திந்திய வானொலி நிலையச் செய்தியாசிரியர் திரு சு.சமுத்திரம் சிறப்புரை நிகழ்த்துவார். மதுரை சௌராட்டிரக் கல்லூரி முதல்வர் முனைவர் தி.ஆர்.பாலகிருட்டிணன் மையக் கருத்துரை வழங்குவார்.

அறிஞர்கள் ஒன்பதின்மர் பல்வேறு பொருள்களில் ஆய்வுரை வழங்குவர். நவீன இலக்கியத்தில் நாட்டமுடைய அனைவருக்கும் இக் கருத்தரங்கு பெரிதும் பயன் நல்கும்.

— சோ. ந. கந்தசாமி, இலக்கியத்துறை.

அறிவியல் சொற்பொழிவு

தாய்மொழி வழி அறிவியல் கற்பிக்கும் நாடுகளில் அறிவியல் முன்னேற்றத்தோடு பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்களும் தமிழ் வழி அறிவியல் முன்னேற்றத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ்ப் பல்கலைக் கழக அறிவியல் தமிழ் வளர்ச்சித் துறை, அறிவியல் சொற்பொழிவு வரிசையை ஏற்பாடு செய்து தொடர்ந்து நடத்தி வருகிறது. அதன் 7-ஆவது அறிவியல் சொற்பொழிவு 5-2-'88 வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணியில் பாபநாசம் அரசினர் மேல் நிலைப்பள்ளியில் அப்பள்ளித் தலைமையாசிரியர் திரு எச்.மகாதேவன் தலைமையில் நடைபெற்றது. சிவகங்கை மன்னர் துரை சிங்கம் அரசினர் கல்லூரிப் பேராசிரியர் திரு உருத்ர. துளசிதாஸ் 'முத்தும் பவளமும்' என்ற பொருளில் சிறப்புரையாற்றினார்.

— அறிவியல் தமிழ் வளர்ச்சித் துறை.

அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறைக் கருத்தரங்கு

தமிழ்ப் பல்கலைக் கழக அயல்நாட்டுக் கல்வித்துறை 'அயல் நாட்டுத் தமிழர்க்குத் தமிழ் மொழிக் கல்வித் திட்டம் வகுப்பதிலும், பாட நூல்கள் எழுதுவதிலும் எழும் பிரச்சினைகள்' எனும் தலைப்பில் 23, 24-2-'88 ஆகிய இரு நாள்களில் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

அயல்நாட்டுத் தமிழர்களுக்கெனக் கல்வித்திட்டங்களும் பாடத் திட்டங்களும் பாட நூல்களும் உருவாக்கப்பட்டு இருந்தும் மனநிறைவான வெற்றியை இன்னும் பெற இயலவில்லை. இதற்குக் காரணமான அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கல்வியியல், மொழியியல் பிரச்சினைகளை விவாதித்து அதன் அடிப்படையில் அயல் நாட்டுத் தமிழர்க்கென மொழிக் கல்வித் திட்டத்தை உருவாக்கும் பாடநூல்கள் எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பது குறித்து இக்கருத்தரங்கு விவாதிக்கும்.

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து பல தமிழ்க் கல்வியாளர்கள் இக்கருத்தரங்கில் பங்கேற்பர்.

— அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித் துறை.

மைசூர் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத் தமிழ் மாணவர்கள் வருகை

மைசூரிலுள்ள இந்தியமொழிகளின் நடுவண்நிறுவனத்தைச் சேர்ந்த தமிழ் பயிலும் ஆசிரிய மாணவர்கள் இச்சனவரித் திங்கள் 25-ஆம் நாள் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வருகைதந்தனர். டாக்டர் சாம் மோகன்லால் மற்றும் டாக்டர் தேவேந்திரன் ஆகியோர் தலைமையில் வந்த இவ்வாசிரிய மாணவர்கள் கேரளம், கருநாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்களாவர்.

நடுவண் அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் மும்மொழித் திட்டத்தின்கீழ் இவ்வாசிரிய மாணவர்கள் பத்துத் திங்கள் இந்நிறுவனத்தில் தமிழ் கற்கிறார்கள். கற்று முடிந்தபின்னர் தத்தம் பள்ளிகளில் தமிழ்மொழியைக் கற்பிப்பர். இதுவரை ஏறத்தாழ 600 பிறமொழி ஆசிரியர்கள் இப்பயிற்சி பெற்று 5000 மாணவர்களுக்கு இந்தியா முழுவதும் தமிழ் கற்பித்து வருகின்றனர் என்று டாக்டர் சாம்மோகன்லால் குறிப்பிட்டார்.

இவ்வாசிரிய மாணவர்களைத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளர் முனைவர் பெ. சின்னையன், அயல் நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை முனைவர் சு.இராசாராம், முனைவர் ஆ. கார்த்திகேயன், கட்டடக் கலைத் துறை முனைவர் கோ. தெய்வநாயகம் ஆகியோர் வரவேற்று தமிழக வரலாறு, தமிழ் கற்பித்தல், தஞ்சைப் பெரிய கோயிலின் கட்டட அமைப்பு ஆகியதலைப்புகளில் பேசினர்.

— அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை.

தமிழ்நாட்டரசின் பரிசு பெற்ற தமிழ்ப் பல்கலைக் கழக நூல்கள்

1. பொது அறுவை மருத்துவம்: முதற் பரிசு. (மருந்து - நல்வாழ்வு)
ஆசிரியர்: டாக்டர் சு. நரேந்திரன், எம்.எஸ்.,

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் அறுவை மருத்துவ உதவிப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். பி.எச்.டி. ஆய்வு செய்கிறார். நோயை வெல்வோம், குடற்புண்ணைக் குணப்படுத்தலாம், மார்பக நோய்கள் பெருங்குடல் திறப்பு ஆகிய நூல்களின் ஆசிரியர். மருத்துவம், அறிவியல்தமிழ் தொடர்பான பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.



2. இந்துத் திருமணச் சட்டம்: முதற் பரிசு. (மானிடவியல்)
ஆசிரியர்: புலமை. வேங்கடாசலம், எம்.ஏ., பி.எல்.,

தமிழ்ப் பல்கலைக் கழக மொழிபெயர்ப்புத் துறையில் சிறப்புஆய்வாளராகப் பணியாற்றியவர். தற்போது வழக்குரைஞர் தொழில் செய்பவர். தன்பகீதம், அர்த்தமுள்ள அழுகை, நியாயக் குரல், அவனைத்தேடி ஓர் ஆன்மா, சட்டத் தமிழ் அகராதி முதலிய நூல்களின் ஆசிரியர்.

3. தமிழ் ஆட்சிமொழி - ஒரு வரலாற்று நோக்கு: முதற் பரிசு. (சிறப்பு வெளியீடு)
ஆசிரியர்: துரை. சுந்தரேசன், இ.ஆ.ப.,

தமிழக மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணிபுரிந்தவர். தற்பொழுது சென்னைப் பெருநகர்க் குடிநீர் வழங்கு வாரியத்தில் செயற்பாட்டு இயக்குநராகப் பணிபுரிந்து வருகிறார். 'என் தலையில் தெறிக்கும் பூக்கள்' எனும் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர்.

4. அறுவைச் சிகிச்சை நோய் நாடல்: இரண்டாம் பரிசு. (மருந்து - நல்வாழ்வு)
ஆசிரியர்: டாக்டர் லெ. சிவராமன், எம்.பி.பி.எஸ்., எப்.ஆர்.சி.எஸ்.,

தஞ்சை மருத்துவக் கல்லூரியில் 22 ஆண்டுகள் மதிப்புறு பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 'சிவராம் மருத்துவ ஆதுரகம்' எனும்மருத்துவ மனையைத் தஞ்சையில் நடத்திவருகிறார்.

பரிசு பெற்ற தமிழ்ப் பல்கலைக் கழக நூலாசிரியர்கள்

தமிழ் நாவல் இயல்: இரண்டாம் பரிசு.
(மொழி, இலக்கியம்)

தமிழ்ப் பல்கலைக் கழகத் தொகுப்பியல்துறைப் பேராசிரியர் தா.வே.வீராசாமிதம் தனி முயற்சியில் எழுதிய 'தமிழ் நாவல் இயல்' எனும் நூல் மொழி, இலக்கியம்பற்றிய ஆய்வு நூல் வரிசையில் 1986-ஆம் ஆண்டிற்குரிய தமிழ் நாட்டரசின் சிறந்த நூலுக்கான இரண்டாம் பரிசு பெற்றுள்ளது.

தமிழகப் பாறை ஓவியங்கள்: இரண்டாம் பரிசு.
(தொல்பொருள்)



தமிழ்ப் பல்கலைக் கழக அருங்காட்சியகப் பொறுப்பாளராகப் பணியாற்றும் இரா. பவுன்துரை தம் தனி முயற்சியில் எழுதிய 'தமிழகப் பாறை ஓவியங்கள்' எனும் நூல் 1986-ஆம் ஆண்டின் தமிழ் நாட்டரசின் சிறந்தநூலுக்கான இரண்டாம் பரிசு பெற்றுள்ளது.

உணர்வு சலிக்கும்

பேச்சிலோ எழுத்திலோ அலுப்புத் தட்டுவதைப் 'போர் அடிக்கிறது' என்று கூறுகிறோம். இதனைச் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் 'உணர்வு சலிக்கும்' என்று எழுதியுள்ளார்.

"கேட்போர்க்கு இன்பம் பயவாது
உணர்வு சலிக்குமாதலின் வந்தன
வந்துழிக் காட்டுதலைக் கருதிற்று
இவ்வுரை என்க"
– சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் பதிகவுரை,

– கோவை. இளஞ்சேரன்.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 15033/82X1

இ.அ.அ. மட்டும்.

37) நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்-613 001.
தமிழ்நாடு-இந்தியா.

நூலகம் வீட்டிற்கு விளக்கம்
நூல் வாங்குதல் நல்ல பழக்கம்

வெளிவரும் புதிய வெளியீடுகள்

1. நுண்கலைகளும் இராகங்களும்
   - து.ஆ.தனபாண்டியன்

   இசைக் கலைக்கு அணிகலன் சேர்க்கும் கருத்துச் செறிவுள்ள இசை இலக்கண நூல்.

2. வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை – அறிமுகம்
   - ஆறு. இராமநாதன்

   நிட்டூரி கதை, சின்னண்ணன் சின்னச்சாமி கதைப் பாடல் ஆகியவற்றைக் கள ஆய்வுசெய்த கருத்துக்களைப் பதிவாக்கிய நூல்.

3. தொல்–சொல்–இளம்பூரணர் உரை
   - பதிப்பாசிரியர்: அடிகளாசிரியர்

   இளம்பூரணர் உரைக்கு விளக்கமும் பிற கருத்து ஒப்பீடுகளும் செறிந்த நூல்.

4. சித்த மருத்துவத் தொகை அகராதி
   - சே. பிரேமா

   தமிழிலுள்ள சித்த மருத்துவ நூல்களின் அகரநிரல்
   – உரிய பதிப்புக் குறிப்புடன்.

5. சட்டத் தமிழ் அகராதி
   - மா. சண்முகசுப்பிரமணியம்
   - புலமை. வேங்கடாசலம்

   சட்டக்கலைச் சொற்களின் அரிய தொகுப்பாகிய அகர முதலி.

6. அறுவகை இலக்கணம்
   - ப.வெ.நாகராசன்

   வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் யாத்த இலக்கண நூல்.

7. உடற்கூறு (முதற்பகுதி)
   - எம். முத்து

   உடற்கூறுகளில் கை, நெஞ்சு பற்றி உரியமருத்துவப் பாங்கில் எழுதப்பட்டது. மருத்துவக் கல்லூரி மாணவர்க்கும், ஆய்வாளர்க்கும் இன்றியமையாதது.

8. அடிப்படைக் கட்டுமான வடிவமைப்பு
   - இலெ.சு.ஜெயகோபால்

   கட்டுமான அடித்தளக் கருத்துக்களை உரிய வரைபடங்களுடன் எளிய தமிழில் விளக்கும் நூல்.

9. கேரளத் தமிழர்களும் அவர்களின் சிக்கல்களும்
   - உ.சுப்பிரமணியம்

   கேரளத்தில் குடியேறி நிலைபெற்ற தமிழர்களது வாழ்வியல் நிலை கூறும் நூல்.

10. வட மாநிலங்களில் தமிழர் – ஆய்வு அறிக்கை
    - சோம. லெ.

    எங்கும் பரவி வரும் தமிழர்கள் இந்திய வட மாநிலங்களில் பெற்றுள்ள நிலையைக் கள ஆய்வு மூலம் விளக்கும் நூல்.

11. வியாசரும் வில்லியும் ஒரு திறனாய்வு
    - ச.கு.கணபதி

    தமிழ், வடமொழி ஒப்பீட்டு ஆய்வு நூல்.

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் – 613 001.